இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

யூதர்கள் அரும் அடையாளங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள்; கிரேக்கர் ஞானத்தை நாடுகிறார்கள். ஆனால் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிப் பறைசாற்றுகிறோம். அச்சிலுவை யூதருக்குத் தடைக் கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாயும் இருக்கிறது. ஆனால் அழைக்கப்பட்டவர்கள், யூதரானாலும் கிரேக்கரானாலும், அவர்களுக்குக் கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார். (1 கொரி 1:22-24)

# மார்ச் 12-13 தினங்களில் ஆண்டவரோடு 24 மணி நேரம்

## திருத்தந்தை அழைப்பு

வத்திக்கான்: இவ்வாண்டில் கடைப்பிடிக் கப்படும், ஆண்டவரோடு 24 மணி நேர இறைவேண்டல்" பக்திமுயற்சிக்கு "அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார்" (தி.பா.103:3) என்ற சொற்கள், தலைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது

உலகில், கொரோனா பெருந்தொற்றின் அச்சுறுத்தல் தொடர்ந்து நிலவி வந்தாலும், இவ்வாண்டும், ஆண்டவரோடு 24 மணி நேர இறைவேண்டல்" என்ற பக்திமுயற்சியைக் கடைப்பிடிக்குமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கத்தோலிக்கர் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

திருத்தந்தையின் இந்த அழைப்பு பற்றி தகவல் வெளியிட்ட, புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவை, தவக்காலத்தின் நான்காம் ஞாயிறுக்கு முந்தைய வெள்ளி, சனி, ஆகிய இரு நாள்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற இந்த பக்திமுயற்சி, இவ்வாண்டு, மார்ச் மாதம், 12 மற்றும், 13ம் தேதிகளில் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

"அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார்" (தி.பா.103:3) என்ற திருப்பாடல் சொற்கள், இவ்வாண்டில் கடைப்பிடிக்கப்படும், அண்டவரோடு 24 மணி நேர இறைவேண்டல்" பக்திமுயற்சியின் தலைப்பாக கொடுக்கப் பட்டுள்ளது.

அனைத்து கிறிஸ்தவ சமுதாயங்களும், இந்த பக்திமுயற்சியை கடைப்பிடிப்பதற்கு உதவியாக, புதியவழி நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவை, சிறிய வழிகாட்டி கையேடு ஒன்றையும் வெளியிட்டுள்ளது.




*"அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார்"*

வருகிற மார்ச் மாதம் 12, 13 ஆகிய தேதிகளில், கத்தோலிக்கர் அனைவரும், ஆண்டவரோடு 24 மணி நேரம் இறைவேண்டலில் செலவழிப்பதற்கு நேரம் ஒதுக்கி, ஒப்புரவு அருள்சாதனத்தைப் பெற்று, இறைவார்த்தையை அடிப்படை-யாகக் கொண்டு இறைவேண்டல் செய்யவும், தியானம் மேற்கொள்ளவும் அழைக்கப்படுகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

2014-ஆம் ஆண்டிலிருந்து, புதியவழி நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவை, “ஆண்டவரோடு 24 மணி நேர இறைவேண்டல்" என்ற பக்தி முயற்சியை, ஏற்பாடு செய்து நடத்திவருகிறது. 2015-ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட தவக்காலச் செய்தியில், இந்த பக்திமுயற்சியில் கத்தோலிக்கர் அனைவரும் பங்குபெறுமாறு கேட்டுக்கொண்டார்.

### திருத்தந்தையின் ஈராக் திருத்தூதுப் பயண நிகழ்வுகள்

மேலும், இம்மாதம் 5-ஆம் தேதி முதல், 8ஆம் தேதி முடிய, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஈராக் நாட்டிற்கு தமது திருத்தூதுப் பயணத்தை மேற்கொண்டிருக் கிறார் பாக்தாத் பன்னாட்டு விமானத் தளத்தில் இடம்பெறும் வரவேற்பு நிகழ்விற்குப்பின், பிரதமரை தனியே சந்தித்துப் பேசும் திருத்தந்தை, பாக்தாத் அரசுத்தலைவர் மாளிகையில், அதிகாரப் பூர்வ வரவேற்பு நிகழ்வுகளில் கலந்து கொள்வார்.




*திருத்தந்தையின் வருகைக்காக காத்திருக்கும் ஈராக்*

தொடர்ந்து, பாக்தாத், அரசுத்தலைவர் மாளிகையில், அரசு அதிகாரிகள், பொது மக்கள் பிரதிநிதிகள், மற்றும், தூதரக அதிகாரிகளைச் சந்தித்து உரையாற்றும் திருத்தந்தை, பாக்தாத் நகரிலுள்ள மீட்பரின் அன்னை மரியா சீரோ-கத்தோலிக்க ஆலயத்தில், ஆயர்கள், அருள்பணியாளர்-கள், துறவிகள், அருள்பணித்துவ பயிற்சி மாணவர்களை சந்தித்து உரையாற்றுவார். மார்ச் 06 சனிக்கிழமையன்று நஜாப், நசிரியா, மற்றும், ஊர் சமவெளியிலும், மார்ச் 07, ஞாயிறன்று, பாக்தாத், எர்பில், கரகோஷ் ஆகிய நகரங்களிலும், நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மார்ச் 08, திங்கள் காலையில், பாக்தாத் நகரிலிருந்து உரோம் நகருக்குப் புறப்படுவார்.

# மியான்மார் வன்முறை விரைவில் நிறுத்தப்படவேண்டும்

**வத்திக்கான்**: பிப்ரவரி 28 அன்று மியான்மார் நாட்டில், போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள்மீது, இராணுவம் மேற்கொண்ட கடுமையான அடக்குமுறை களையடுத்து, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாட்டின் அமைதிக்காக, மார்ச் 3, கடந்த புதனன்று வழங்கிய மறைக்கல்வி உரையின் இறுதியில், மீண்டும் ஒருமுறை விண்ணப்பம் செய்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த விண்ணப்பத்தை விடுத்த இதே புதனன்று, மியான்மார் நாட்டில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 9 பேர் கொல்லப்பட்டனர் என்றும், பிப்ரவரி 1, முடிய அந்நாட்டில் இராணுவ அடக்கு முறைகளால் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 30 என்றும் ஊடகங்கள் கூறுகின்றன.

மிகக் குறைந்த காலமே மக்களாட்சியின்



சுவையை உணர்ந்துள்ள மியான்மார் நாட்டு மக்கள், மீண்டும் அந்த மக்களாட்சி வழியில் முன்னேற்றத்தைக் காண அனைவரும் இணைந்து உரையாடல்களை மேற்கொள்ளவும், சிறையில் உள்ள அரசியல் தலைவர்கள் விடுவிக்கப்படவும் தான் மீண்டும் ஒருமுறை வேண்டிக் கேட்டுக்கொள்வதாக திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

# 'திருவிவிலியத்தில் 'சீடத்துவம்' தலைமைத்துவப் பயிற்சி

‘கனிதரும் சீடத்துவம்’ எனும் பெயரில் தீபகற்ப மலேசிய திருஅவையின் பொதுநிலையினரின் மேம்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பணிக்குழு, தற்போது ஒரு வருடகால தியானம் மற்றும் உருவாக்கப்பயிற்சியில் பங்கேற்று



*அருள்தந்தை அருள்நாதன் ஜோசப்*

வருகிறது. ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்கலை (online) வாயிலாக நடை பெறும் இப்பயிற்சியை அருள்பணி யாளர்கள் பொறுப்பேற்று வழங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்க்கது.

இவ்வரிசையில் கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற இரு உருவாக்கப்பயிற்சி களையும் பினாங்கு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்தந்தை அருள்நாதன் ஜோசப் அவர்கள் ‘திருவிவிலியத்தில் சீடத்துவம்’ என்ற தலைப்பில் வழங்கினார்.

குறிப்பாக, நான்கு நற்செய்திகளிலிருந்தும் மேற்கோள்கள் காட்டி எவ்வாறு சீடத்தும் இயேசுவின் காலத்தில் உருவாக்கம் கண்டது என்பதை விளக்கினார். சீடத்துவத்தில் காணப்படும் சிக்கல்கள், சவால்கள் போன்றவை இயேசுவின் காலத்திலும் இருந்தன என்பதை தெளிவுப்படுத்தியதோடு, சீடத்தவத்தில் துணிவும், தெளிவும், ஆற்றலும் இன்றியமை யாதவை என்பதை வலியுறுத்தினார்.

*-ஜோசப் ஆனந்த், மலாக்கா*

# 'கிறிஸ்தவ ஒன்றிப்பு' என்பதன் பொருள் என்ன?

இயேசு தமது சீடர்களின் ஒற்றுமை குறித்து பெரிதும் அக்கறை காட்டி வந்தார். இதற்கு யோவான் 10:16, 17:21 ஆகிய பகுதிகளை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். திருஅவையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கருத்து வேறுபடுகளின் காரணமாகத் தோன்றி வரும் பல்வேறு கிறிஸ்தவச் சபைகள் இயேசுவின் திருவுடலைக் கூறுபோடுவதோடு, .கிறிஸ்துவை மையமாக வைத்துக் கொண்டே அனைவரும் செயல்படுகின்றனர். என்பதையும் மறுப்பதற்கில்லை.

கிறிஸ்தவ சமூகத்தினர் தெருவுக்கு ஒரு சபையாக வெவ்வேறு பெயர்களைச் சூட்டிக்கொண்டு இயங்கினாலும், இவர்களுக்கு எல்லாம் உள்ளுயிராக, உயிரோட்டமாகச் செயல்படுபவர் இயேசு கிறிஸ்து என்பதையும் மறுப்பதற்கில்லை.

இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கப் பட்டுள்ள நம்பிக்கையால், திருமுழுக்குப் பெற்றுள்ள அனைவரும் கடவுளின் மக்கள் ஆகின்றனர் (கலா 3:26-27). திருமுழுக்குப் பெற்றுள்ள அனைவரும் கிறிஸ்துவின் திருவுடலைச் சார்ந்தவர்கள் (1 கொரி 12:27). இதனிமித்தம், கிறிஸ்துவின் திருவுடலில் அங்கம் பெற்றுள்ள அனைவர் மத்தியிலும் பாகுபாடோ அல்லது ஏற்றத்தாழ்வுகளோ நிலவ இயலாது (1 கொரி 12:-13).

ஆகவே, திருமுழுக்குப் பெற்றதினால் இயேசுவின் சீடர்களான அனைவரும் ஒன்றாய் இணைந்திருக்க இயேசுவும் தந்தையிடம் மன்றாடுகிறார் (யோவான் 17:21) எனவே, கிறிஸ்துவே கிறிஸ்தவர்களின் ஒன்றிப்பின் மையம் என்பதை நாம் ஏற்கும்போது, கத்தோலிக்கத் திருஅவையும் கடந்த காலங்களில் அதன் கோட்பாடுகள், திருமுழுக்கு, ஒப்புரவு, நற்கருணை போன்ற அருளடையாளங்கள், பக்தி முயற்சிகள், புனிதர்கள் வணக்கம் இவற்றை இறுக்கப் பிடித்துக் கொண்டு, பிரிந்த சபையினரை தனக்குள் ஈர்க்க வழிதேடியது. இந்த முயற்சியில் இன்று மாற்றங்கள் பிறந்துள்ளன.

கிறிஸ்தவ ஒன்றிப்பு (Ecumenism) என்பது ஒற்றுமைக்கு அனைவரையும் அழைத்து வர வேண்டும் என்பதற்கான முயற்சியாகும். கத்தோலிக்கத் திருஅவை கொண்டிருக்கும் கோட்பாடுகளை மையமாக வைக்காமல், கிறிஸ்துவை மையமாக வைத்து அனைவரும் ஒன்றிக்க வேண்டும் என்ற சிந்தனை இன்று தலைத்தூக்கி வருகிறது. நல்வாழ்விற்காகவும், உரிமைக்காவும் போராடிக்கொண்டிருக்கும் மக்கள் மத்தியிலும், மனித மாண்பில் வாழத்துடிக்கும் அனைவரையும் மனிதநேய அடிப்படையில், துன்புறும் ஏழைகளையும், ஒடுக்கப்பட்டோரையும், ஒதுக்கப் பட்டோரையும் விடுவிக்கும் விடிவெள்ளி-யாக கிறிஸ்தவர்களை ஒன்றிக்கச் செய்வதே கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் தலையாய நோக்கமாகும்.

மிகவும் அவல நிலையில் எண்ணற்ற ஏழைகள் உள்ள இவ்வுலகில் கிறிஸ்தவர்கள் தெருவுக்கு ஒரு சபை வைத்துக் கொண்டு தங்களை அழகுப் பார்ப்பதும், நாங்கள் தாய் திருஅவை, நீங்கள் எல்லாம் நேற்று பூத்த காளான்கள் என்று மாரத்தட்டிக்கொள்வதும், இயேசுவைச் சிறுமைப்படுத்தும் செயலாகும்.

இவ்வுலகில் இறையாட்சி எனும் இயேசுவின் இலட்சியாக் கனவு கனவாகவே இருந்துவிடுமோ எனும் அச்சம் மேலிடும் இக்காலத்தில், கத்தோலிக்கத் திருஅவை, திருமுழுக்கை அடிப்படையாகக் கொண்ட அனைத்து கிறிஸ்தவ சபைகளையும் ஒரு குடையின் கீழ்க் கொண்டுவர அரும்பாடுபட்டு வருகிறது. இன்றைய திருத்தந்தையர்கள் இதற்கான முற்சியில் இறங்கியுள்ளனர். வெறும் வேதாந்தங்-களும் கோட்பாடுகளும் அல்ல, மாறாக கிறிஸ்துவின் மீது மையம் கொண்ட சிந்தனை செயல்பாடுகளுக்கும் மனிதநேயத்தை மையமாகக் கொண்ட மீட்புப் பணிகளில் கவனம் செலுத்த அனைத்து சபைகளையும் ஒன்றித்துச் செயல்பட அழைப்பது கிறிஸ்தவ ஒன்றிப்பாகும்.

இன்று நாம் கொண்டிருக்கும் தமிழ் திருவிவிலியம் ஒரு பொது மொழி பெயர்ப்பு. இது கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான பெரும் முயற்சி. இதில் நாம் வெற்றிபெற்றுள்ளோம் என்றும் கூறலாம். வத்திகானில் இதற்கென ஒரு அலுவலகமும் பொறுப்பாளர்களும் இருக்கிறார்கள். மலேசியாவில் நாம் கொண்டிருக்கும் மலேசிய கிறிஸ்தவ கூட்டமைப்பு (Christian Federation of Malaysia ) இதற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாகும்.

-ஆர்.கே.

# புனித 2-ஆம் ஜோன் பவுல் அவர்களின் கனவு நனவாகியது

ஈராக் நாட்டு மக்களைச் சந்திக்க திருத்தந்தை ஒருவர் வெளிப்படுத்திய ஆவலும், திருத்தந்தையை தங்கள் நாட்டில் வரவேற்க அந்நாட்டு மக்கள் கொண்டிருந்த ஆவலும், 22 ஆண்டுகளுக் குப்பின் தற்போது நனவாகியுள்ளது எனத் திருப்பீட தகவல் தொடர்பு அவையின் செய்திப் பிரிவு இயக்குனர், அந்திரேயா தொர்னியெல்லி தெரிவித்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இம்மாதம் 5-ஆம் தேதி முதல் 8-ஆம் தேதி வரை, ஈராக் நாட்டிற்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டுள்ளது குறித்து தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார் தொர்னியெல்லி.



மேலும் அந்நாட்டு மக்களுடன் நெருக்கமாக இருக்கவும், பயங்கரவாதத்தாலும், போராலும் பாதிக்கப் பட்டுள்ள நாட்டை கட்டியெழுப்பும் பணிகளுக்கு ஆதரவு வழங்கவும், அந்நாட்டு மக்களை நோக்கி விரித்த இருகரங்களுடன் திருத்தந்தை அந்நாட் டிற்குச் செல்வதாகத் தெரிவித்தார்.

1999-ஆம் ஆண்டே, ஈராக் நாட்டிற்கு திருத்தூதுப் பயணம் செல்ல திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுல் அவர்கள் வகுத்திருந்த திட்டம், இறுதி நேரத்தில் நிறைவேறமுடியாததிலிருந்தே, அந்நாட்டு மக்கள் திருத்தந்தையின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தனர் என்று கூறிய, வத்திக்கான் செய்திப் பிரிவு இயக்குனர் தொர்னியெல்லி அவர்கள், திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுல் மீட்பின் யூபிலி ஆண்டினை, ஆபிரகாமோடு தொடர்புடைய ஊர் நகரிலிருந்து துவக்கத் திட்டமிட்டிருந்தார் என்றுரைத்தார்.

எந்தச் சூழலிலும் போரைத் தவிர்ப்போம் என குரல் எழுப்பி வந்த திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுல் அவர்களின் கனவை நனவாக்கச் சென்றிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், போர் என்பது, மனித குலத்திற்கும் அரசியலுக்கும் கிடைத்துள்ள தோல்வி என்பதைக் குறிப்பிட்டு வருகிறார், என தன் செய்தியில் கூறுகிறார், செய்திப் பிரிவு இயக்குனர்.

இயேசுவின் சீடர்கள் போதித்து வந்த காலத்திலேயே கட்டப்பட்ட ஆலயங்களைக் கொண்டுள்ள ஈராக் நாட்டில், இன்று, பல்வேறு துயர்களைச் சந்திக்கும் கிறிஸ்தவர்கள் வேறு நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளதாகக் கூறும் தொர்னியெல்லி அவர்கள், கடந்த 22 ஆண்டுகளில், அந்நாட்டு கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை, மூன்றில் இரு பகுதி குறைந்துள்ளதாகத் தெரிவிக்கிறார்.

எத்தகையச் சுழலிலும் நாட்டைவிட்டு வெளியேறும் எண்ணத்தைக் கைவிட்டு, மனவுறுதியுடன் ஈராக் கிறிஸ்தவர்கள் வாழவேண்டும் என அழைப்புவிடுத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் திருத்தூதுப் பயணத்தின் வழியாக, தன் அருகாமையை அறிவிக்க விரும்புவதாகவும், நாட்டில் இடம்பெற்றுவரும், ஒப்புரவு, அமைதி முயற்சிகள் போன்றவைகளுக்கு நேரில் சென்று ஆதரவு வழங்க விரும்புவதாகவும், தன் செய்தியில் கூறியுள்ளார் தொர்னியெல்லி.

# இறையன்பில் ஒளிபெற்று பிறர் அன்புக்கு வாழ்வோம்

இயேசு எருசலேம் ஆலயம் ஒரு சந்தையாக மாற்றப்பட்டிருப்பதைப் பார்த்து கோபம் கொண்டு அதை தூய்மையாக்கினார் என்பதே இன்றைய நற்செய்தியின் சாராம்சம். ஆலயம் மனிதனும் இறைவனும் சந்திக்கும் இடம். இதயத்தில் பாவ சுமைகளோடு உள்ளம் உடைந்தவர்களாய் வருபவர்களுக்கு அமைதி தரும் இடம் ஆலயம். இப்படிப்பட்ட இடத்தை வியாபார இடமாக்கினவர்களைச் சாட்டை கொண்டு விரட்டுகிறார் இயேசு. ஆலயத்தில் எது நிகழ வேண்டுமோ அது நிகழவில்லை, என்ன நிகழக்கூடாதோ அது நிகழ்கிறது.

தூய்மையின் இருப்பிடமான தந்தையின் இல்லமான ஆலயத்தில் புறவினத்தார், தொழுநோயாளிகள் நுழையக் கூடாது என்று சொல்லிவிட்டுத் தங்களின் சுயநலத்துக்காக அதை வியாபார இடமாகப் பயன்படுத்துவதைப் பார்த்து இயேசு உண்மையிலேயே கொதிப் படைந்து, அவர்களை வன்மையாகக் கண்டித்தார்.

இன்றைய முதல் வாசகம் , விடுதலைப் பயண நூலில், கடவுள் மோசே வழியாகக் கூறியதை, மோசே இஸ்ரேயல் மக்களுக்குக் கடவுளின் கட்டளையாக அளிக்கிறார். “உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே, ஏனெனில் தன் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் தண்டியாது விடமாட்டார்” என்று எச்சரிக்கை விடுக்கிறார் மோசே.

மேலும், இரண்டாம் வாசகம் புனித பவுல் கொரிந்து நகர் மக்கள் அரும் அடையாளங்கள் வேண்டும் என்று கேட்பதைச் சுட்டிக் காட்டி, நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே அரும் அடையாளமாகப் பறைசாற்றுகிறோம் என்றும், கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார் என்று வெளிப்படுத்துகிறார்கள்.

மக்களை மதிக்காத வியாபாரம், புனிதத்தை கெடுக்கும் வியாபாரம் இவற்றை கண்டு இயேசு வேதனையடைகிறார். இன்று, நாம், நம் கண்முன் எத்தனை அவலங்கள், அட்டூழியங்கள், அராஜகங்கள் அரங்கேறினாலும்,அதைக் கண்டும் காணாதவர்;போல சென்று விடுகின்றோம். யார் எப்படி போனால் என்ன, நான் நன்றாக இருந்தால் போதும், என் காரியம் நடந்தால் போதுமென்ற என்ற சுயநலப்போக்கு நம் ஒவ்வொருவரிலும் மேலோங்கிக் காணப் படுகின்றது. “யாராவது, எவராவது தட்டிக் கேட்பார்கள்”, “நமக்கேன் வீண் வம்பு” என கோழைகளாக ஒதுங்கி விடுகிறோம்.

இறைவனின் இதயம் எப்போதும் ஏழைகளின் பக்கமே சார்ந்திருந்ததை இன்றைய மூன்று வாசகங்களும் நமக்கு நினைவூட்டுகின்றன. நாமும் பல நேரங்களில் கள்வர் குகையாகத்தான் மாறிவிடுகின்றோம். ஆலயத்தின் வளாகத்தில் வியாபாரம் செய்ய இல்லை என்றாலும், ஆலயத்தின் உள்ளேயே மற்றவர்களை ஏளனப்படுத்துவதும், பிறரின் நற்பெயரைக் கெடுப்பதும், இறைவனின் அன்பு கட்டளையை மீறுவதுமாக இப்படிப்பட்ட மனநிலைகளுக்கு நாம் சென்று விடுகிறோம்.

‘ஆலயம் தொழுவது சாலமும் நன்று’ என்ற மூத்தோர் வாக்கினைப் போல், நாம் ஆலயம் செல்வதனால் எத்தகைய பலனைப் பெறுகின்றோம் என்று உண்மையை இந்த நிகழ்வு மிக அருமையாக எடுத்துக் கூறுகின்றது. இன்று நாம் படிக்கக்கேட்கும் வாசகங்கள் நம்மை ‘உயிருள்ள ஆலயங்களாக வாழ அழைக்கின்றது. எனவே இந்த தவக்காலத்தில் நம்மிடம் மாற்றம் ஏற்பட வேண்டும். ஏனெனில், ஆலயத்தில் கடவுளின் முன்னிலையில் நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா.

நிறைவாக, அனைத்திலும் பணம் தான் பிரதானம் என்றில்லாமல், மனித மாண்பும், நலமும், மனித வளமையும் அக்கரையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதனை உணர்ந்து செயல்பட முன்வர வேண்டியது காலத்தின் கட்டாயம். சிந்திப்போம் பக்தியோடு இத்தவக் காலத்தில் தியானிப்போம்.

*- சவரிநாதன், சுங்கைபட்டாணி*

**தவக்காலம் 3-ம் வாரம்**
விப: 20:1-17
திபா: 19: 7. 8. 9. 10
1 கொரி : 1 : 22-25
யோவான் : 2: 13-25
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 3**